Board Exam
Class X
2023

Series ψYZXW

Set-4

प्रश्न-पत्र कोड
Q.P. Code 10

रोल नं.
Roll No.

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ.மதிப்பெண்கள் : 80*
*Time allowed : 3 hours* | *Maximum Marks : 80*

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **15** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும் 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **15** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **15** questions.
- **Please write down the Serial Number of the question in the answer-book before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

***General Instructions :***

பொதுவான வழிமுறைகள் :

1. *The questions paper contains **FOUR** sections.*

   இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

2. *Section **A** – contains **2** questions.*

   பகுதி அ – 2 வினாக்களைக் கொண்டுள்ளது.

3. *Section **B** – Contain **4** questions.*

   பகுதி ஆ – 4 வினாக்களைக் கொண்டுள்ளது.

4. *Section **C** – Contain **3** questions.*

   பகுதி இ – 3 வினாக்களைக் கொண்டுள்ளது.

5. *Section **D** – Contain **6** questions.*

   பகுதி ஈ – 6 வினாக்களைக் கொண்டுள்ளது.

6. *Attempt as per specific instructions for each question.*

   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

7. *Please write down the Serial no. of the question in the answer book before attempting it.*

   பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.

## SECTION – A
## பகுதி – அ

1. (அ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதையடுத்து வரும் பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

தமிழ்நாட்டில் குடவோலை முறை பற்றிய செய்திகள் பாண்டிய நாட்டிலேயே முதலில் கிடைக்கப் பெற்றுள்ளன. கி.பி. 800 காலங்களிலேயே திருநெல்வேலி மானூரில் கண்டுபிடிக்கப்பட்ட மாறன் சடையனின் கல்வெட்டு ஒன்று பாண்டிய நாட்டுக் கிராமங்களில் குடவோலை வழக்கத்தில் இருந்தாகக் கூறுகின்றது. உத்திரமேரூரில் முதல் பராந்தகன் சோழன் காலத்து வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டு கி.பி. 919/921 இல் வரையப் பெற்று உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் கிராம நிர்வாகம் குடவோலை முறை ராசராச சோழன் காலத்திற்கு முன்பே இருந்து வந்தது தெளிவாக விளங்குகிறது. தொல்காப்பியமும் அக்காலத்தில் வாழ்ந்த வீரமகளிர்கள் பற்றியும் அவர்கள் குடவோலை முறைப்படி தலைவர்களை தேர்ந்து எடுப்பதிலும் பங்கேற்றதாகக் குறிப்பிடுகிறது.

**வினாக்கள் :**

(i) குடவோலை முறைபற்றியச் செய்திகள் முதன் முதலில் எந்த நாட்டில் கிடைக்கப் பெற்றன?

(அ) சோழ நாட்டில் (ஆ) சேர நாட்டில்

(இ) பாண்டிய நாட்டில் (ஈ) தமிழ் நாட்டில்

(ii) மாறன் சடையனின் காலத்தில் குடவோலை முறை இருந்தது என்பதை உறுதிபடுத்துவது எது?

(அ) ஓலைச்சுவடி (ஆ) செப்பேடு

(இ) கல்வெட்டு (ஈ) செவிவழிச்செய்தி

(iii) உத்திரமேரூர் யாருடைய ஆட்சியின் கீழ் இருந்தது?

(அ) சோழர்கள் (ஆ) பல்லவர்கள்

(இ) பாண்டியர்கள் (ஈ) சேரர்கள்

(iv) __________ சுவரில் குடவோலை பற்றிய செய்திகள் கிடைக்கப்படுகிறது?

(அ) அரண்மனை (ஆ) கோவில்

(இ) வீட்டில் (ஈ) அரங்கின்

(v) தொல்காப்பியம் எத்தகைய மகளிர்களைக் காட்டுகிறது?

(அ) இளமகளிர்களை (ஆ) நல்லமகளிர்களை

(இ) ஆடல்மகளிர்களை (ஈ) வீரமகளிர்களை

**(அல்லது)**

(ஆ) தேவநேயப் பாவாணர் மிகச்சிறந்த தமிழறிஞரும் சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் நாற்பதுக்கும் மேலான மொழிகளின் சொல் இயல்புகளைக் கற்று மிக அரிய சிறப்புடன் சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இலக்கியத்திற்கு அடிமரமாய், ஆழ்வேராய் இருந்து சிறப்பாக உழைத்தார். இவருடைய ஒப்பரிய தமிழறிவும் பன்மொழியியல் அறிவும் கருதி, சிறப்பாக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் என்று அழைக்கப்பட்டார். தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத் தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது எனவும் திராவிடத்திற்குத் தாயாகவும் விளங்கிய மொழியென வாதிட்டவர். கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிடவைகளுக்குச் சொற்கள் பலவற்றை அளித்தது என்று நிறுவியவர் பாவாணர் ஆவார். தமிழின் வேர்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்களின் வழி உலகிற்கு எடுத்து இயம்பினார்.

**வினாக்கள் :**

(i) பாவாணர் எதில் வல்லுநராகத் திகழ்ந்தார்?

(அ) சொல்லாராய்ச்சியில் (ஆ) மொழியாராய்ச்சியில்

(இ) தமிழாராய்ச்சியில் (ஈ) இலக்கிய ஆராய்ச்சியில்

(ii) பாவாணர் எத்தனை மொழிகளின் மொழி இயல்புகளைக் கற்றறிந்தார்?

(அ) 20க்கும் மேலம் (ஆ) 30க்கும் மேல்

(இ) 40க்கும் மேலம் (ஈ) 50க்கும் மேல்

(iii) பாவாணர் யாருடைய வழியில் நின்று பணியாற்றினார்?

(அ) திரு. வி.க. வின் (ஆ) தந்தையின்

(இ) வரதராசனாரின் (ஈ) மறைமலை அடிகளின்

(iv) பாவாணர் எத்தகைய தமிழறிவைப் பெற்றிருந்தார்?

(அ) அளப்பரிய அறிவு (ஆ) ஒப்பரிய அறிவு

(இ) சிறப்பான அறிவு (ஈ) நுட்பமான அறிவு

(v) உலக மொழிகளில் மூத்தமொழி எது?

(அ) தமிழ் (ஆ) வடமொழி

(இ) ஆங்கிலம் (ஈ) பிரெஞ்சு

2. (அ) பின்வரும் பத்தியைப் படிக்க அதையடுத்து வரும் பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. **5 × 1 = 5**

நாட்டில் உள்ள பழமையான பெருநகரங்களில் மிக முக்கியமானது சென்னை. 1639 முதல் சென்னை மாநகராட்சிக்கு நீண்ட வரலாறு உண்டு. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியரால் 1688-ம் ஆண்டில் சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி 1798-ல் நிறுவப்பட்டது. அது இன்று உலக வரைபடத்தில் இடம் பெறும் அளவுக்கு சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இந்தியாவின் கலாச்சாரத் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரில் எல்லா மதத்தினரும், எல்லா மொழியினரும் வாழ்ந்து வருவதும், நவீன மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டிருப்பதும் 'மெட்ரோபாலிடன் நகரம்' என்ற அந்தஸ்தை இந்நகருக்குக் கிடைக்கச் செய்துள்ளது.

சென்னை, பல்வேறு பகுதிகளில் இருந்து வருபவர்களின் குடியேறுபவர் நகரமாக இருந்து வருகிறது. சென்னை மக்கள் தொகையில் குடியேறியவர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாக உள்ளது.

வினாக்கள் :

(i) சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் எப்போது அமைக்கப்பட்டது ?

(அ) 1679 (ஆ) 1688

(இ) 1649 (ஈ) 1639

(ii) சென்னை எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது ?

(அ) உலக வரைபடத்தில் இடம்பெறா அளவுக்கு

(ஆ) உலக வரைபடத்தில் இடம்பெற முடியா அளவுக்கு

(இ) உலக வரைபடத்தில் ஒரு மூலையில் இடம்பெறும் அளவுக்கு

(ஈ) உலக வரைபடத்தில் இடம்பெறும் அளவுக்கு

(iii) சென்னை நகருக்கு எந்த அந்தஸ்து கிடைத்துள்ளது ?

(அ) காஸ்மோபாலிடன் (ஆ) கார்ப்பரேஷன்

(இ) மெட்ரோபாலிடன் (ஈ) முனிசிபாலிடி

(iv) சென்னையில் மக்கள் தொகையில் குடியேறியவர்களின் சதவீதம் எத்தனை ?

(அ) 25% (ஆ) 40%

(இ) 50% (ஈ) 60%

(v) சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் யாரால் ஆரம்பிக்கப்பட்டது ?

(அ) மேற்கிந்திய கம்பெனியால்

(ஆ) கிழக்கிந்திய கம்பெனியால்

(இ) வடக்கிந்திய கம்பெனியால்

(ஈ) தெற்கிந்திய கம்பெனியால்

**(அல்லது)**

(ஆ) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.

உலகம் ஒவ்வொருவரின் கைப்பிடியில் வந்துவிட்ட காலம் இது. அன்று பரந்த உலகமாக தோன்றியது. இப்பொழுது ஒவ்வொருவருக்கும் எண்ணற்ற வசதி வாய்ப்புகளை அளிக்கின்றது. தகவல் பரிமாற்றங்கள், செய்திகள், கலாச்சாரம் மற்றும் அனைத்து பொதுவான செய்தி வெளிப்பாடுகள் எல்லாம் சேர்ந்து ஒரு சிறிய கிராமிய உலகமாக மாறி இருக்கிறது. இந்திய நாட்டு இளைஞர்கள் பலரின் இலட்சியக் கனவு வெளிநாட்டுக் கல்வி. இந்த வெளிநாட்டுக் கல்வி தகவல் பகுதி ஒவ்வொரு மாணவனுக்கும் அவனுடைய தேவைக்கேற்ப விருப்பமான படிப்புகளைத் தேர்வு செய்து கொள்ள அளவில்லாத வாய்ப்புகளைக் கொடுத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் மாணவ சமுதாயம் அவர்களுடைய சரியான கல்வித்திட்டத் தகவங்களைச் சேகரித்துக் கொள்ள அத்தியாவசியப்படுகிறது. இது மட்டும் இல்லாமல் எதிர்காலத்துக்கும் தொழில் வாய்ப்புக்கு தேவையான உலக அறிவை நன்கு புரிந்து கொள்ள இந்த கல்விகள் உதவிகின்றன. பெற்றறோர்களும் ஒரு பொதுவான முடிவை தேர்ந்தெடுக்க முடிவதில்லை. கல்வியானது ஒவ்வொரு குழந்தைக்கும் நீண்ட காலம் பயன்படும் முதலீடாகிறது. நாட்டின் வளர்ச்சிக்கு காலத்திற்குக் காலம் கல்வி நிலைமை மாறி வந்திருக்கிறது.

வினாக்கள் :

(i) இன்றைய உலகம் எவ்வாறு உள்ளது?

(அ) ஒவ்வொருவரின் கைப்பிடியில்

(ஆ) ஒவ்வொருவரின் எண்ணங்களில்

(இ) ஒவ்வொருவரின் மனதில்

(ஈ) ஒவ்வொருவரின் சிந்தைகளில்

(ii) இந்திய நாட்டு இளைஞர்களின் லட்சியக் கனவு என்ன?

(அ) உள்நாட்டுக் கல்வி (ஆ) வெளிநாட்டுக் கல்வி

(இ) மேனிலைக் கல்வி (ஈ) உயர்நிலைக் கல்வி

(iii) நாட்டில் காலத்திற்குக் காலம் மாறுவது எது?

(அ) நாகரிகம் (ஆ) உடை

(இ) கல்வி (ஈ) பண்பாடு

(iv) தகவல் பரிமாற்றங்கள், செய்திகள், கலாச்சாரங்கள் நாட்டை எவ்வாறு மாற்றியுள்ளன?

(அ) உலகமயமாதல் (ஆ) உலகம் கிராமமயமாதல்

(இ) உலக கிராமம் (ஈ) கிராமிய உலகம்

(v) கல்வியானது ஒவ்வொரு குழந்தைக்கும் எப்படிப்பட்ட முதலீடாகிறது ?

(அ) நீண்ட கால | (ஆ) குறுகிய கால
(இ) வாழ்நாள் கால | (ஈ) ஆயுள் கால

## SECTION – B

### பகுதி – ஆ (இலக்கணப் பகுதி)

3. (அ) சான்றுதருக. (எவையேனும் நான்கு மட்டும்) $4 \times 1 = 4$

(i) ஒற்றளபெடை

(அ) எடுப்பதூஉம் | (ஆ) மகடூஉ
(இ) கலங்ங்கு | (ஈ) வரனசைஇ

(ii) அன்மொழித்தொகை

(அ) தாயும் சேயும் | (ஆ) முறுக்கு மீசைவந்தார்
(இ) மார்கழித்திங்கள் | (ஈ) ஆடுகளம்

(iii) எழுவாய்த்தொடர்

(அ) அப்பா வந்தார் | (ஆ) கொடுத்த பணம்
(இ) கண்டேன் சீதை | (ஈ) சாலச்சிறந்தது

(iv) முன்னிலை வினை

(அ) வந்தேன் | (ஆ) நடந்தாய்
(இ) சென்றான் | (ஈ) பறந்தன

(v) சுட்டு விடை

(அ) இங்கே உள்ளது! | (ஆ) நீயே செய்!
(இ) தலை வலிககும்! | (ஈ) வருவேன்!

4. கூறியவாறு செய்க : (எவையேனும் நான்கனுக்கு மட்டும்) $4 \times 1 = 4$

(i) மணி – (தொடர்மொழியாக மாற்றுக).

(அ) மணிகள் | (ஆ) மணிகண்டன்
(இ) மணிமேகலை | (ஈ) மணி வந்தான்

(ii) நண்பன் – (விளித் தொடராக மாற்றுக).

(அ) நண்பா வா! (ஆ) வந்தான் நண்பன்

(இ) வந்த நண்பன் (ஈ) நண்பனை அழைத்தான்

(iii) மாதவி வந்தான் – (வழா நிலையாக மாற்றுக).

(அ) மாதவி வருகிறான் (ஆ) மாதவி வந்தாள்

(இ) மாதவி வருவான் (ஈ) மாதவி வந்து சென்றான்

(iv) கோவிலைக் கட்டினான் – வேற்றுமைத் தொகைத் தொடராக்குக.

(அ) கோவில் கட்டினான் (ஆ) கோவிலில் கட்டினான்

(இ) கோவிலுக்குக் கட்டினான் (ஈ) கோவிலையே கட்டினான்

(v) விளையாடலாமா? – உறுவது கூறல் விடைதருக.

(அ) விளையாடாமல் இருப்பேனா?

(ஆ) விளையாட முடியாது

(இ) கால் வலிக்கும்

(ஈ) விளையாடலாம்

5. இலக்கணக் குறிப்புத் தருக : (எவையேனும் நான்கனுக்கு மட்டும்) $4 \times 1 = 4$

(i) எள்ளாமை

(அ) தொழிற்பெயர் (ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

(இ) எதிர்மறைத் தொழிற்பெயர் (ஈ) வினையாலணையும்

(ii) கயல்விழி

(அ) பண்புத் தொகை (ஆ) அன்மொழித் தொகை

(இ) உவமைத் தொகை (ஈ) வினைத் தொகை

(iii) வந்தேன்! வந்தேன்! வந்தேன்!

(அ) வினைமுற்றுத் தொடர் (ஆ) வேற்றுமைத் தொடர்

(இ) பெயரெச்சத் தொடர் (ஈ) அடுக்குத் தொடர்

(iv) தென்னந் தோப்பு

(அ) வழு (ஆ) வழாநிலை

(இ) வழுவமைதி (ஈ) மரபுவழு

(v) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

(அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(ஆ) முறை நிரல் நிறைப்பொருள்கோள்

(இ) விற்பூட்டுப் பொருள்கோள்

(ஈ) கொண்டு கூட்டுப் பொருள்

6. நிரப்புக : 4 × 1 = 4

(i) உயிரளபெடையில் __________ அளபெடுக்கும்.

(அ) நெட்டெழுத்து ஏழும் (ஆ) குறில் எழுத்துகள் ஐந்தும்

(இ) வல்லினம் ஆறும் (ஈ) மெய்யெழுத்து பதினெட்டும்

(ii) வழா நிலை __________ வகைப்படும்.

(அ) ஏழு (ஆ) எட்டு

(இ) பத்து (ஈ) பதினாறு

(iii) காலம் கரந்த பெயரெச்சமே __________ எனப்படும்.

(அ) வேற்றுமைத் தொகை (ஆ) பண்புத் தொகை

(இ) உவமைத் தொகை (ஈ) வினைத் தொகை

(iv) வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது __________ எனப்படும்.

(அ) வேற்றுமைத் தொடர் (ஆ) வினைமுற்றுத் தொடர்

(இ) இடைச்சொல் தொடர் (ஈ) உரிச்சொல் தொடர்

## SECTION – C

### பகுதி – இ (இலக்கியம்)

7. பின்வரும் பாடலைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக. 5 × 1 = 5

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

வினாக்கள் :

(i) இயல், இசை, நாடகம் __________ என அழைக்கப்படுகிறது?

(அ) மூன்றுதமிழ் (ஆ) முத்தமிழ்
(இ) சங்கத்தமிழ் (ஈ) செந்தமிழ்

(ii) சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுவர் யார்?

(அ) தமிழழகனார் (ஆ) கம்பர்
(இ) பாரதியார் (ஈ) வாணிதாசன்

(iii) இரட்டுற மொழிதல் அணியை __________ என்றும் அழைப்பர்.

(அ) அந்தாதி (ஆ) கலம்பகம்
(இ) சிற்றிலக்கியம் (ஈ) சிலேடை

(iv) தமிழ் __________ அணிகலன்களைக் கொண்டது.

(அ) நான்கு (ஆ) ஐந்து
(இ) ஆறு (ஈ) இரண்டு

(v) கடல் தருவன எவை?

(அ) முத்தும் அமிழ்தும் (ஆ) மீனும் சர்க்கரையும்
(இ) பவளமும் முத்தும் (ஈ) அலையும் மழையும்

8. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக. 5 × 1 = 5

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது. தனித்து உண்ணாமை என்பது தமிழர்களின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை 'உண்டால் அம்ம இவ்வுலகம்' என புறநானூறு குறிப்பிடுகின்றது.

வினாக்கள் :

(i) முன்பின் அறியாத புதியவர் யார்?

(அ) விருந்தினர் (ஆ) அயலார்
(இ) நண்பர் (ஈ) பகைவர்

(ii) 'விருந்தே புதுமை' என்று உரைத்த தமிழ் அறிஞர் யார்?

(அ) கம்பர் (ஆ) தொல்காப்பியர்
(இ) திருவள்ளுவர் (ஈ) இளங்கோவடிகள்

(iii) விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது?

(அ) உண்ணாமை (ஆ) சேர்ந்து உண்ணுதல்
(இ) தனித்து உண்ணுதல் (ஈ) தனித்து உண்ணாமை

(iv) அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்குக் கொடுப்பவர் ____________

(அ) பெரியோர் (ஆ) சிறியோர்
(இ) நல்லோர் (ஈ) தீயோர்

(v) உண்டால் அம்ம, இவ்வுலகம் – இவ்வரி இடம் பெற்றுள்ள நூல் ____________

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு
(இ) ஆசாரக்கோவை (ஈ) நாலடியார்

9. பின்வரும் குறட்பாக்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக. $4 \times 1 = 4$

(i) அரியவற்றுள் எல்லாம் அரிதே ____________
பேணித் தமராக் கொளல்.

(அ) பெரியாரைப் (ஆ) சிறியாரைப்
(இ) வறியோரைப் (ஈ) வல்லோரைப்

(ii) இடிப்பாரை ____________ ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

(அ) எல்லாத (ஆ) இல்லாத
(இ) இருக்கின்ற (ஈ) கொடுக்கின்ற

(iii) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
____________ புகுத்தி விடும்.

(அ) நன்மை (ஆ) தீமை
(இ) இன்மை (ஈ) வளமை

(iv) பொருளல்ல வரைப் ____________ செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

(அ) பொருளாகச் (ஆ) புகழச்
(இ) பெருமையாகச் (ஈ) சிறுமையாகச்

## SECTION – D

## பகுதி – ஈ

10. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டினுக்கு மட்டும் விடை தருக. $2 \times 3 = 6$

(i) இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உரைத்தன யாவை ?

(ii) வித்துவக் கோட்டம்மாவிடம் குலசேகர ஆழ்வார் உரைப்பன (கூறியவை) யாவை ?

(iii) பாவாரேறு பெருஞ்சித்திரனார் தமிழை எவ்வாறு போற்றுகிறார் ?

(iv) காசிக்காண்டம் கூறும் ஒன்பது விருந்தோம்பல் பண்பினை எழுதுக.

11. பின்வரும் உரைநடைப்பகுதி வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. **3 × 4 = 12**

(i) மனிதனால் காற்று எவ்வாறு மாசடைகிறது என்பதை விவரி.

(ii) செயற்கை நுண்ணறிவு முதன்மையானது – ஏன்?

(iii) மொழிப்பெயர்ப்பின் பயன்களை விரிவாக எழுதுக.

(iv) கொழுந்து வகை, பூவின் நிலைகள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

(v) கரகாட்டத்தை விளக்கி எழுதுக.


12. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 7 = 7**

(i) கோபல்லபுரத்து மக்கள்

(ii) புதிய நம்பிக்கை

(iii) பாய்ச்சல்

13. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. **3**



பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வருவனவற்றைத் தொடரில் அமைத்து எழுதுக.

(i) கை கழுவி விட்டான்

(ii) கை கொடுத்தான்

14. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக. **1 × 6 = 6**

(i) உங்கள் பள்ளிக்குத் தேவையான புத்தகங்களை அனுப்பித் தருமாறு புத்தக பதிப்பகத்தாருக்கு ஒரு கடிதம் வரைக.

(ii) கூகுள் நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்திருக்கும் உன் அண்ணனுக்கு வாழ்த்துக் கூறி கடிதம் எழுதுக. (இருகடிதங்களிலும் உம் முகவரி இளமாறன்/இளமதி, *16*, பெரிய தெரு, சென்னை – *3* எனக் கொள்க)

15. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. **1 × 6 = 6**

(i) முன்னுரை – தொன்மை – உயர்மொழி – தனிமொழி – தமிழ் செம்மொழி – தமிழின் பொதுப்பண்பு – அரசின் கடமை – முடிவுரை

(அல்லது)

(ii) முன்னுரை – தூய்மை இல்லாமை – தூய்மை திட்டத்தைச் செயல் படுத்துதல் – நம் கடமைகள் – முடிவுரை

(அல்லது)

(iii) முன்னுரை – மாணவப்பருவம் – பல்வேறு இயக்கங்கள் – கல்வித் தொண்டு – சுகாதாரப் பணி – சமுதாயப் பணிகள் – முடிவுரை